# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**


ஊடகச் செய்தி எண்.01/2021 நாள்.27.01.2021

# “இழந்ததை மீட்டிட, இருப்பதை காத்திட” தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில அளவிலான - போராட்ட ஆயத்த மாநாடு

# பிப்ரவரி 2 முதல் தொடர் மறியலும் - சிறை நிரப்பும் போராட்டமும்

நாள் : 27.01.2021
நேரம் : பிற்பகல் 3 மணி

இடம் : UC மேல்நிலைப்பள்ளி
அரசரடி, மதுரை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநித்துவப் பேரவை கடந்த 20.12.2020 அன்று தருமபுரியில் நடைபெற்றது.இப்பேரவையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில்

1. முதல் கட்ட நடவடிக்கையாக “ஜனவரி-5 முதல் 12 வரை மாநில முழுவதும் உறுப்பினர் சேர்ப்பு மற்றும் பிரச்சார இயக்கம்” நடைபெற்றுள்ளது.

2. இரண்டாம் கட்ட நடவடிக்யையாக “ஜனவரி,19-20 தேதிகளில் மாநிலம் முழுவதும் 7 மண்டலங்களில் போராட்ட ஆயத்த மாநாடுகள்” நடைபெற்றுள்ளன.

3. மூன்றாம் கட்ட நடவடிக்கையாக இன்று 27.01.2021 மதுரையில் “இழந்ததை மீட்டிட, இருப்பதை காத்திட” மாநில அளவிலான “போராட்ட ஆய்த்த மாநாடு” கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கி நடைபெறுகிறது.

இந்த போராட்ட ஆய்த்த மாநாட்டினை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் தோழர் **மு. அன்பரசு** தலைமை தாங்கி நடத்தினார். மாநாட்டு பிரகடன உரையினை பொதுச் செயலாளர் தோழர் **ஆ. செல்வம்** உரை நிகழ்த்தினார்.

இம்மாநாட்டில் அரசு ஊழியர்களின் போராட்ட நியாயங்களை விளக்கி **"உரிமை முழக்கம் உரத்து ஒலிக்கட்டும்"** என்ற தலைப்பில் மாண்புமிகு திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் மற்றும் திராவிட முன்னேற்ற கழக தலைவர் அவர்களும்,

**"எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்"** என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய தோழர் **கே. பாலகிருஷ்ணன்**, மாநிலச் செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அவர்களும்,

"விடியலும் **விடுதலையும் உங்கள் கையில்"** என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய திரு. **தொல். திருமாவளவன்,** நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் தலைவர், விடுதலை சிறுத்தைகள் கட்சி அவர்களும்

**"இப்படை தோற்கின் எப்படை வெல்லும்"** என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய திரு. **கே.எஸ். அழகரி,** தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அவர்களும்

**"தொண்டனுக்கு தோல்வலி கண்டால் தலைவனுக்கு தலைவலிதான்"** என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய தோழர் **P.சேதுராமன்**, தேசிய செயற்குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அவர்களும்
கானொளி காட்சி மூலம் உரையாற்றினர்.

இந்த மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாட்டில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநிலப் பொருளாளர் திரு. **வெ. சோமசுந்தரம்** அவர்களும், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாநில பொதுச் செயலாளர் திரு. **ச. பாரி** அவர்களும், தமிழ்நாடு வணிகவரிப் பணியாளர் சங்க மாநில துணைத் தலைவர் **சா. டானியல் ஜெயசிங்** அவர்களும், தமிழ்நாடு தொழில்நுட்ப ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு ஆட்சிமன்றக்குழு உறுப்பினர் திரு. **ம. அந்தோணிசாமி** அவர்களும், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் திருமதி. **A. நூர்ஜகான்** அவர்களும் **"மறுக்கப்படும் உரிமைகள் மதிக்கப்பட"** என்ற தலைப்பில் வாழ்த்துரை வழங்கினர்.

மேலும் **"உரிமை மீட்பு வெறும் போரல்ல, புனிதப்போர்"** என்ற கருத்தின் அடிப்படையில் ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் திரு. **அ. மாயவன்**, திரு. **இரா. தாஸ்,** திரு. **கு. வெங்கடேசன்**, திரு. **கே.பி.ஓ. சுரேஷ்**, திரு. டாக்டர் **ஆர். தாமோதரன்**, திரு. **ச. மோசஸ்**, திரு. **கு. தியாகராஜன்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இறுதியாக **"போராட்டங்கள் தோற்றதில்லை"** என்ற கருத்தாக்கத்துடன் மாநில பொருளாளர் தோழர் **மு. பாஸ்கரன்** நன்றியுரை வழங்கினார்.

இந்த வேலை நிறுத்த ஆயத்த மாநாட்டில் தமிழகம் முழுவதுமிருந்து **10 ஆயிரத்திற்கும்** மேற்பட்ட அரசு ஊழியர்கள் பங்கேற்றனர்.

மாநில அளவிலான இந்த போராட்ட ஆயத்த மாநாட்டிற்கு பின்பும் தமிழக அரசு சங்க தலைவர்வளை அழைத்துப்பேசி கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை என்றால் எதிர்வரும் **பிப்ரவரி 2 முதல் – தொடர் மறியலும் – சிறை நிரப்பும் போராட்டமும்** தமிழகமெங்கும் நடைபெறம் என மாநில நிர்வாகிகள் தெரிவித்தனர். இந்த தொடர் மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்திற்கான பிரச்சார இயக்கமும் சங்க நடவடிக்கைகளும் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

# கோரிக்கைகள்

1. CPS திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை நடைமுறைப்படுத்திட வேண்டும்.

2. ஜாக்டோ-ஜியோ போராட்டத்தின் போது போராட்டத்தல் பங்கேற்றோர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றக் குறிப்பாணைகளை ரத்து செய்யக்கோரியும், முன்னாள் மாநிலத் தலைவர் மு. சுப்பிரமணியன் உள்ளிட்டோரின் பணி ஓய்வின்போதான தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்திட வேண்டும்

3. 21 மாத கால நிலுவைத் தொகை முடக்கப்பட்ட அகவிலைப்படி, பறிக்கப்பட்ட சரண்டர் உள்ளிட்ட உரிமைகளை பெற்றிட வேண்டும்.

4. சத்துணவு மற்றும் அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்புற நூலகர்கள், எம்.ஆர்.பி. செவிலியர்கள், உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதயம் பெறும் மூன்றரை இலட்சம் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும்.

5. இளைஞர்களின் வேலைவாய்ப்பினைப் பறிக்கும் ஆதிசேஷைய்யா , இ.ஆ.ப. தலைமையிலான பணியாளர் சீரமைப்பு குழுவின் பரிந்துரையை ரத்து செய்திட வேண்டும்

6. 2002ல் பணி நீக்கம் செய்யப்பட்ட சாலைப்பணியாளர்களின் பணி நீக்க காலமான 41 மாத காலத்தை பணிக்காலமாக முறைப்படுத்திட வேண்டும்

7. ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தை(IFHRMS) கைவிட வேண்டும்.

**(மு.அன்பரசு)**
மாநிலத் தலைவர்

**(ஆ.செல்வம்)**
பொதுச் செயலாளர்